Registered as a Newspaper

சுவைமிக்க உஸ்வத்தை
கண்டோஸ் தயாரிப்பு
களுக்கு விஜயம்செய்யுங்கள்
பெட்டா
எசன்ஸ்
சப்பிளையர்ஸ்
333, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ. 1-25

சிறு கைத்தொழில்களுக்கு
ஏற்ற மூலப்பொருள்களை
மலிவாகப்
பெற்றுக்கொள்ள
யாழ் நகரில் முதன்மை
வகிக்கும் ஸ்தாபனம்
பெட்டா
எசன்ஸ்
சப்பிளையர்ஸ்
333, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஸு ஆடி மீ 15 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுஸ்ஹஜ் பிறை 4 (31 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 211

# இந்திய அமைதிப் படையினர் இன்று
# யாழ். குடாநாட்டைப் பார்வையிடுவர்

### நல்லூரில் இன்று கொடியேற்றம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்த சுவாமிகோவில் வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

பெருந்திரளான அடியார்கள் திருவிழாக் காலங்களில் இம்முறை கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மக்கள் குறைகளைக் கேட்டறிய பலாலி -- ஆனையிறவு வரை செல்வர்

— கே. இரத்தினராஜசிங்கம், எம். பேரின்பநாயகம் —

யாழ்ப்பாணம் ஜூலை 31

வடபகுதி வந்திருக்கும் இந்திய அமைதிப் படையினர் இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பார்வை இடுவார்கள். அதற்காக அவர்கள் பலாலியில் இருந்து ஆனையிறவு வரை செல்வார்கள். அப்போது அவர்கள் மக்களின் குறைகளையும் கேட்டறிவார்கள்.

இந்திய அமைதிப் படைக்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் ஹர்கிரத் சிங் வந்திருக்கிறார். அவருக்கு உதவியாக மூன்று பிரிகேடியர்களும் வந்துள்ளனர்.

பலாலி, பருத்தித்துறை ஆகிய இராணுவ முகாம்களில் இருக்கும் இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த துருப்புகள் ஸ்ரீலங்கா அரச படையினரின் கவச வாகனங்களிலும், டிரக்குகளிலும் குடாநாட்டின் பலபகுதிகளிலும் உள்ள முகாம்களைச் சென்றடைவர்.

அமைதிப் படையினர் முதலில்முகாம்களில் இருந்து சிலயார் தூரம் வரை நடைபவனியாகவே வெளியே வருவர். பின்னர் அவர்கள் வாகனங்களில் பயணம் செய்வர்.

அமைதிப் படையினர் இன்று காலை எட்டு மணிக்கு சகல இராணுவ முகாம்களில் இருந்தும் வெளியே வருவர். அவர்களை இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் வரவேற்பர்.

இந்தியத் துருப்புக்களுடன் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் எந்தவேளையிலும் வெளியே வர மாட்டார்கள் என அறியப்படுகிறது.

இந்திய அமைதிப் படையினர் தாம் செல்லும் இடங்களில் பொது மக்களின் குறைகளைக் கேட்டறிந்தபடி குடாநாட்டில் உள்ள சகல இராணுவ முகாம்களுக்கும் விஜயம் செய்வர்.

இந்திய இராணுவத்தினர் தற்காப்பு ஆயுதங்களை மட்டுமே வைத்துக்கொள்வர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல கிழக்கு மாகாணத்தில் உள்ள இந்திய அமைதிப்படை இராணுவத்தினர் அங்கும் சகல பகுதிகளையும் நாளை சென்று பார்வை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மினி முகாம்களை அகற்றும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வடக்கு, கிழக்கில் புதிதாகஅமைக்கப்பட்ட மினி முகாம்கள் அனைத்தும் உடனடியாக அகற்றப்படும்.

நேற்றே இந்த மூடுவிழா ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

அதாவது 1987 மே 26ஆம் திகதிக்குமுன்னர் இருந்த முகாம்கள் மாத்திரமே இனி இயங்கும்.

அதன்பின்னர் அமைக்கப்பட்ட அனைத்து முகாம்களும் உடனடியாக அகற்றப்படும்.

இத்தகவலை இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (இ-ஒ-10)

## இந்திய துருப்புகள் எவர் தலைமையில் இயங்கும்?

கொழும்பு, ஜூலை 31

வடபகுதி வந்துள்ள இந்தியத் துருப்புக்கள் எவரின் தலைமையில் செயல்படுவது என்பது பற்றி கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

இத்தகவலை இந்தியத் தூதர் டிக்ஸிற் ஊர்ஜிதம் செய்தார்.

இலங்கை இராணுவ அதிகாரியின் தலைமையில் இந்தியத் துருப்புக்கள் செயல்படவேண்டும் என்று இலங்கை அரசு கூறுகின்றது.

அப்படிச் செயற்பட முடியாது; இந்திய இராணுவ அதிகாரியின் தலைமையில் செயல்பட முடியும் என இந்திய வட்டாரங்கள் கூறுகின்றன. (இ-எ)

## வடமராட்சியில் இந்தியத் துருப்புகள்
### ஸ்ரீலங்கா துருப்புகள் வாபஸ்

வடமராட்சி, ஜூலை31

நேற்று அதிகாலை முதல் இந்தியத் துருப்புக்கள் வடமராட்சியின் பலபாகங்களிலும் காணப்பட்டனர்.

மேலும் இலங்கை இராணுவச் சிப்பாய்கள் இந்தியச் சிப்பாய்களுக்கு வழிகாட்டிகளாகச்சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

இந்திய துருப்புக்கள் வந்ததைத் தொடர்ந்து வடமராட்சியில் உள்ள மினி முகாம்களில் இருந்து சிப்பாய்கள் பலாலி முகாமை நோக்கிப் பின்வாங்க ஆரம்பித்தனர். (இ-160)

### சுபநேரம்

31-07-1987
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
6.03 முதல் 7.33 வரை
ராகுகாலம்:-
10.33 முதல் 12.03வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### முச்சந்தி முரளி



அவ்ரோவும் பொம்மரும் ஹெலியும் ஓடித் திரிஞ்ச வானத்திலை இப்ப பெரியபெரிய விமானங்கள் பறக்குது பாக்கயில்லையே..!

## ஒப்பந்த விவரம் ஹெலி மூலம் போடப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 31

ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கும் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் நேற்று கைச்சாத்தான ஒப்பந்த விவரங்கள் இன்று பொது மக்களுக்கு துண்டுப்பிரசுரங்கள் மூலம் தெரிவிக்கப்படும்.

இன்று நண்பகல் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரின் ஹெலிக்கொப்டர்கள் மூலம் இத்துண்டுப் பிரசுரங்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வீசப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எமது அனுமதியின்றி எவரும் ஆயுதபாணிகளாக வந்தால் மோதுவோம்
### இறுதிவரைப் போராட புலிகள் வீர சபதம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

எமது கட்டுப்பாட்டுப் பிராந்தியத்திற்குள் எமது ஆலோசனைகளோ, அனுமதியோ இன்றி எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவோ, அல்லது ஆயுதபாணிகளாக ஆக்கிரமிப்பதையோ நாம் எம் இறுதி மூச்சுவரை எதிர்த்துப் போராடுவோம். எம்மீது எந்தத் திட்டங்களையோ, ஆக்கிரமிப்புக்களையா எவரும் திணிக்க முயற்சிப்பார்களானால், அதற்கு எம் பிணங்களைக் கடந்துதான் அவற்றை நிறைவு செய்ய வேண்டும் என்பதை மிகவும் ஆணித்தரமாக கூறிவைக்க விரும்புகிறோம்.

இதே வேளையில் ஆயுதமற்ற நிலையில் நட்புணர்வோடு வருபவர்களை நிச்சயமாக நாம் வரவேற்று ஆதரிப்போம். நாம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கோ, இந்திய மக்களுக்கோ எதிரானவர்கள் அல்லர். தமிழீழ மக்களின் தொடர்ந்த உறுதியான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவுடன் தொடர்பு கொள்ளமுடியாத நிலை

யாழ்ப்பாணம், ஜூலை31

புதுடில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்ட எமது தலைவர் பிரபாகரனுக்கும் எமக்கும் இடையே மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருந்து வந்த தகவல் தொடர்புகள் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளன.

இந்நிலையில் அங்கு என்ன நடக்கின்றது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகள் ஆயுதம் ஒப்படைக்க வேண்டிய இடங்கள் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 31

போராளிகள் எங்கு ஆயுதங்களை ஒப்படைக்கலாம் என்ற விவரங்களை நேற்று இலங்கை வானொலி தெரிவித்தது.

விவரம் வருமாறு:

யாழ்ப்பாணமாவட்டம்;
காங்கேசன் துறை.
ஊர்காவற்றுறை.
கைதடி.
புலோலி
யாழ் நகரம்.

கிளிநொச்சி மாவட்டம்:
கிளிநொச்சி நகரம்.
இயக்கச்சி,
பூநகரி.

முல்லைத்தீவு மாவட்டம்:
முல்லைத்தீவு.
ஒட்டுசுட்டான்.
மாங்குளம்.

மன்னார் மாவட்டம்:
மன்னார் நகரம்
முருங்கன்.
இலுப்பைக்கடவை.

வவுனியா மாவட்டம்:
வவுனியா நகரம்.
ஓமந்தை.
செட்டிகுளம்.

அம்பாறை மாவட்டம்:
அம்பாறை நகர்.
அக்கரைப்பற்று.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை கேட்கும்போது துருப்புக்களை திருப்பி அழைப்போம் -- ராஜீவ்

புதுடில்லி, ஜூலை 30

ஆப்கானிஸ்தானுக்குள் சோவியத் துருப்புகள் இருக்கும் நிலையுடன் இலங்கையில் இந்தியத் துருப்புகள் இருப்பதை ஒப்பிட முடியாது.

எப்போது இந்தியத் துருப்புகள் இலங்கையில் இருந்துவிலகிக்கொள்ளப் படவேண்டும் என்று இலங்கை கேட்கிறதோ அப்போது நமது துருப்புக்கள் விலக்கிக்கொள்ளப்படும்.

பிரதமர் ராஜீவ்காந்தி முன் கண்டவாறு புதுடில்லியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

பிரதமர் மேலும் சொன்னதாவது:

சமாதான உடன்படிக்கையை ஜனாதிபதி ஜெயவர்த்தன அமுல்நடத்துவர் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

இச்சமாதான உடன்பாடு நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படாமல் செய்வதற்காக வன்செயல்களைக் கொழும்பில் நடத்த சில சக்திகள் முயற்சிக்கின்றன.

இந்தியத் துருப்புக்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டது சமாதான உடன்பாட்டைச் சரிவர அமுல் நடத்தவே.

வடபகுதியில் இருந்து இலங்கைப் படையினரை முந்திய இடங்களுக்குக் கொண்டுசெல்லவே போக்குவரத்து விமானங்களை இந்திய அரசு இலங்கைக்கு அனுப்பியது.

இப்படி பிரதமர் காந்தி சொன்னார். (இ-எ)

## தமிழ்ப் பகுதிகளில் இந்திய அமைதிப்படை
## ஸ்ரீலங்கா இராணுவம் தென்பகுதிக்கு

### 24 இந்திய போர், போக்குவரத்து விமானங்கள் சேவையில்

யாழ்ப்பாணம், ஜூலை 31

சுமார் மூவாயிரம் இந்திய அமைதிப் படையினர் புதன் கிழமை மாலை தொடக்கம் நேற்று மாலைவரை தமிழ்ப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களில் தரை இறக்கப்பட்டனர்.

அவர்களை ஏற்றி வந்த இந்திய போர் விமானங்களும், போக்குவரத்து விமானங்களும் வடக்கு, கிழக்கில் இருந்த இராணுவத்தினரில் ஒரு பகுதியினரை தென்பகுதிக்கு ஏற்றிச்சென்றன.

இந்தியாவின் போர் விமானங்களும், போக்குவரத்து விமானங்களுமாக மொத்தம் 24 விமானங்கள் இச்சேவையில் ஈடுபட்டுள்ளன.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் வேண்டுகோளைத் தொடர்ந்தே தாம் இந்தியத் துருப்புக்களை அனுப்பியதாக இந்தியப் பிரதமர் காந்தி புதுடில்லி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கொழும்பு நகரில் நேற்று இடம் பெற்ற வன் செயல்களை அடக்குவதில் வடபகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

கடந்த மூன்று தினங்[illegible]லும், மற்றும் தென் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் நடைபெற்ற வன்செயல்களில் ஐம்பதுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர் என்று வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் அறிவித்திருக்கின்றன.

### பொது விடுமுறை

இன்று வெள்ளிக் கிழமையும் அரசாங்க, வர்த்தக, வங்கி விடுமுறை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

## தலைக்கு வந்த ஆபத்து தோளோடு போனது
### சம்பவம் குறித்து ராஜீவ்

புதுடில்லி, ஜூலை 31

தலைக்கு வந்த ஆபத்து தோளோடு போயிற்று.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி புதுடில்லி விமான நிலையத்தில் செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

நேற்றுக்காலை கொழும்பு ஜனாதிபதி மாளிகை முன் பிரிய விடை அணி வகுப்பு மரியாதையில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் தன்னைத் தாக்கிய சம்பவம்பற்றி பிரதமர் செய்தியாளர்களிடம் விவரித்தார்.

துப்பாக்கிப் பின்பக்கத்தினால் தாக்கப்பட்டதன் பின்னர் இடது பக்கக் கழுத்தில் ஏற்பட்ட வீக்கத்தைப் பிரதமர் செய்தியாளர்களிடம் காண்பித்தார்.

தாக்குதல் சம்பவம் பற்றி பிரதமர் சொன்ன

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் எப்படி தாக்கப்பட்டார்?

கொழும்பு, ஜூலை 31

எப்படி பிரதமர் காந்தி கடற்படைச் சிப்பாயினால் தாக்கப்பட்டார்?

இதுபற்றி பினான்ஷியல் டைம்ஸ் செய்தியாளர் ஜோன் எலியட் சொன்னதாவது:

ஜனாதிபதி மாளிகை

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆண்டு அவலங்கள் அகல வழி வகுக்கும்

## சரித்திரத்தில் முக்கிய நிகழ்ச்சி
### ஜனாதிபதி மாளிகை வரவேற்பில் ராஜீவ் உரை

கடந்த நான்கு ஆண்டு காலமாக நிலவி வந்த அவலங்கள் இந்த ஒப்பந்தம் மூலம் நீங்குகின்றன

இலங்கை - இந்திய வரலாற்றில் இது ஒரு முக்கிய நிகழ்ச்சி ஆகும்.

புதன் பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் பிரதமர் ராஜீவ் காந்திக்கு வரவேற்புபசாரம் அளிக்கப்பட்டது.

அப்போது திரு. ராஜீவ் காந்தி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் சொன்னதாவது:

எனது பாட்டனார் ஜவஹர்லால் நேருவும் இலங்கை வந்தார்.

நானும் இலங்கைக்கு இப்போது வந்துள்ளேன். அந்நியர்கள் மத்தியில் இருப்பவர் போன்ற உணர்வு எனக்கு வரவே இல்லை என்பதை உண்மையாகச் சொல்கின்றேன்.

**இலங்கை உதவி கேட்டது**

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இருள் சூழ்ந்த ஜூலை மாதத்தில் தீவை ஆட்டிப்படைத்த பிரச்சினைக்குத் தீர்வுகாண எமது நல்லெண்ண உதவிகளை இலங்கை அரசு நாடியது.

இந்த நான்கு ஆண்டுகளும் சோதனைகள், இடுக்கண்கள் நிறைந்த காலம் ஆகும்.

பெரும் அழிவுகள் ஏற்பட்டன. நூறாண்டுகளுக்கு மேலாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்த சமூகங்கள் பிரிந்து போயின. இலங்கையின் பொருளாதாரம் சீர்கேடு அடைந்தது. அகதிகள் பாக்குநீரிணை ஊடாக இந்தியா வந்தனர்.

இந்தக் கஷ்டத்தின் மத்தியிலும் நாம்பேச்சுக்களை நடத்திக்கொண்டு வந்தோம்.

நாம் ஒரு உடன்பாடு கண்டிருக்கின்றோம். இரு நாடுகளின் சரித்திரத்தில் இது முக்கிய நிகழ்வாகும்.

இது அமைதியை உருவாக்கும் சகோதரத்துவத்தை உருவாக்கும் உடன்படிக்கை.

இது இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க உறுதி செய்கின்றது.

அகதிகள் நாடு திரும்ப இது வழி வகுக்கின்றது. இரு நாடுகளின் உறவு மீது மூடப்பட்டிருந்த மேகங்களை இந்த உடன்படிக்கை அகற்றுகின்றது.

இலங்கை அரசினதும் மக்களினதும் விவேகத்துக்கும் புரிந்துணர்வுக்கும் கிடைத்த காணிக்கையாக இந்த உடன்படிக்கை அமைகின்றது.

**ஜே. ஆரின் துணிச்சல்**

இதற்காக ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் துணிச்சலுக்கும் இராஜதந்திரத்துக்கும் நான் விசேஷமாகப் புகழ்மாலை சூட்ட விரும்புகின்றேன்.

அன்பு, கருணை, சாந்தி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது இந்த உடன்பாடு.

இந்தியா, இலங்கைக்கு இடையேயான சரித்திர கால உறவுகளை இந்த உடன்படிக்கை உறுதிப்படுத்துகின்றது.

பூகோள ரீதியிலான அமைப்பு மட்டும் எம் இரு நாடுகளையும் கட்டுப்படுத்தவில்லை; எம் உறவு இதயத்துடனும் மனதுடனும் இணைந்தது; சரித்திரத்துடனும் தத்துவத்துடனும் கலையுடனும் இலக்கியத்துடனும் இணைந்தது.

தற்கால சூழ்நிலை அன்றாட வாழ்வுடனும் எம் உறவுகள் இணைந்து உள்ளது.

நாம் ஒருவர் மீது ஒருவர் வைத்துள்ள நம்பிக்கைதான் பேச்சுக்களுக்கு அடிப்படையாக அமைந்தன.

எம் நம்பிக்கை சந்தோஷமான முடிவினால் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஒற்றுமைக்காகவும் அதன் நலனுக்காகவும் உழைக்க இந்தியாவுக்கு உறுதுணையாக இந்த உடன்படிக்கை அமைந்துள்ளது.

ஒவ்வொரு உடன்பாடும் விசுவாசத்தின் செயல்பாடே.

விசுவாசம் வெற்றி அடைய விடாமுயற்சியும் பின்வாங்காத் தன்மையுமே தேவை.

**வழிக்குக் கொண்டு வருவது எம்பணி**

ஜனநாயகத்தில் விமர்சிப்பவர்கள் தான் அதிகம்; ஆதரவளிப்பவர்களிலும் பார்க்க.

இந்தஉடன்பாட்டைப் பாதுகாப்பதும் குறை கூறுபவர்களை வழிக்குக் கொண்டு வருவதும் எம் பணியாகும்.

இந்த உடன்பாட்டை அமுல் நடத்தும் முக்கிய கட்டத்துக்கு நாம்போக வேண்டியுள்ளது.

அதற்காக எம் மத்தியில் உள்ள நல்லெண்ணத்தைப் பயன்படுத்த வேண்டும்.

இது பழிவாங்குதலுக்கும் பதில் குற்றச்சாட்டுச் சுமத்துவதற்கும் உரிய நேரமல்ல.

நொந்த உள்ளங்களைச் சமாதானப் படுத்தும் நேரம் இது. உறவைப் புதுப்பிப்பதற்கும் புனர்நிர்மாணம் செய்வதற்கு ஏற்ற நேரம் இது.

எமது வழிகாட்டியாக சுப்பிரமணிய பாரதியார் அமையட்டும்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; ஒற்றுமைநீங்கில் அனைவருக்கும் தாழ்வு

இந்தப் படிப்பினையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். வேறெந்தப் பாடமும் எமக்குத் தேவை இல்லை.

**பயணத்தை மீண்டும் தொடர்வோம்**

இந்தஉடன்பாடுமூலம் எமது பயணத்தை மீண்டும் தொடர்வோம்.

இரண்டு நாடுகளும் அந்தப் பயணத்தைத் தான் இதுவரை மேற்கொண்டு வந்துள்ளன.

யுத்தம், வன்செயலைத் துறந்த அசோக மன்னன் தனது மகனை புத்தரின் கருணை, அன்பு, அஹிம்சை ஆகியசெய்தியுடன் இலங்கைக்கு அனுப்பி வைத்தார்.

அந்தப் பயணத்தையே மீண்டும் தொடர்வோம்.

இந்திய-இலங்கை நல்லுறவு நீடூழி வாழ்க.

இப்படி பிரதமர்காந்தி பேசி முடித்தார்.

★★★★★★★★★
★ சின்னஞ்சிறு ★
★ விளம்பரம் ★
★★★★★★★★★

**வாடகைக்கு**

ஸ்ரீதர் தியேட்டருக்கும் யாழ் புகையிரத நிலையத்திற்கும் ஹட்டன் நஷனல் வங்கிக்கும் அண்மையில் யாழ் மாநகர சபையாக இயங்கிவந்த மணியம்ஸ் சட்டிடம் 3500 சதுர அடி மூன்று மாடி காரியாலய பாவிப்பிக்கோ அல்லது பொது ஸ்தாபன பாவிப்பிற்கோ வாடகைக்கு விடப்படும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: மணியஸ் ரெக்ஸ் ரைல் 16 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(1376)

**நீத்தார் பட்டியல்**

**திருமதி
கமலாம்பிகையம்மா கந்தையா**

இல. 136, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி கமலாம்பிகையம்மா கந்தையா (முன்னாள் ஆசிரியை, யாழ் இந்து ஆரம்ப பாடசாலை) 14-7-87 அன்று சென்னையில் காலமானார். அன்னார் இளைப்பாறிய அதிபர் சுப்பிரமணியம் கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், மோகனகாந்தன், (நோர்வே) சாயாதேவி, (கச்சேரி, யாழ்ப்ணம்) ஞானகாந்தன் (ஜேர்மனி) தேவகாந்தன் (கனடா) உமாதேவி (குயின் மேரி கல்லூரி, சென்னை) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி யோகாம்பிகை தர்மலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியை) திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-7-87 அன்று திருவொற்றியூர் மயானத்தில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்: S. சண்முகசுந்தரம்

95 D, எல்லையம்மன் கோவில் வீதி,
திருவொற்றியூர், சென்னை 19. (1374)

## கடல் வழியாகவும் துருப்புக்கள் வந்தன

இந்தியத் துருப்புக்கள் தென் இந்தியாவில் இருந்து வடபகுதிக்கு அனுப்பப்பட்டன.

அரைவாசித் துருப்புக்கள் விமானங்கள் மூலமும் மிகுதித் துருப்புக்கள் கப்பல்கள் மூலமும் அனுப்பிவைக்கப்பட்டன.

இப்படி யுனைட்டட் பிரெஸ் இன்டர்நேஷனல் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இந்தியத் துருப்புக்கள் பலாலி முகாமில் இலங்கை இராணுவ பிரிகேடியர் ஜே. ஈ. டி. சில்வாவின் அனுசரணையுடன் யுத்த நிறுத்தப் பணியில் ஈடுபடுத்தப்படும் என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (இ-எ)

## துருப்புகள் பூரணமாக நிலைகொண்ட பின்னர் யுத்த நிறுத்தம்

இந்தியத் துருப்புக்கள் தமிழர் பகுதிகளில் பூரணமாக நிலை கொண்ட பின்னர் யுத்த நிறுத்தத்தை நாம் கடைப்பிடிப்போம்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

பி. பி, சி. வானொலி நேற்று நண்பகல் அதனைத் தெரிவித்தது.

ஆயுதங்களை ஒப்படைப்பது பற்றி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இன்னும் உறுதிப்படுத்தவில்லை என்றும் பி. பி. சி. வானொலி மேலும் தெரிவித்தது. (இ-எ)

## 10 விமானங்களில் இந்தியத்துருப்புகள் வடக்கில் இறங்கின!

கொழும்பு, ஜூலை 31

பத்து விமானங்களில் இந்தியத் துருப்புக்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு தளத்தில் இறங்கின.

இத்தகவலைத் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்தார்.

சுமார் ஆயிரத்து எழுநூறு இந்தியத் துருப்புக்கள் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்க வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் திரு. அத்துலத்முதலி ராய்ட்டரிடம் தெரிவித்தார்.

இன்று பிற்பகலில் இருந்து யுத்த நிறுத்தம் அமுலுக்கு வருகின்றது.

நாளை சனிக்கிழமைக்கு முன்னர் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்.

— இப்படி இலங்கை - இந்திய உடன்பாடு கூறுகின்றது. (உ-எ)

## பலாலி முகாம்மேல் விமானங்கள் சாகஸம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

இந்திய விமானங்கள் ஸ்ரீலங்கா இராணுவ முகாம் அமைந்துள்ள வானவெளிகளில் சாகசம் புரிந்தன.

நேற்று காலை எட்டு மணியளவில் பலாலி விமானத் தளத்துக்கு மேலாக ஐந்து இந்திய விமானங்கள் ந்தன.

இவற்றில் இரண்டு விமானங்கள் பலாலி விமானத்தளத்தில் தரையிறங்க ஏனைய மூன்று விமானங்கள் வான வெளிகளில் சுழன்றும் சரிந்தும் சாகசம் புரிந்தன.

(இ 10)

# புலிகள் அனுமதியின்றி இந்தியத் துருப்புகள் வெளியேவர மாட்டா!

யாழ்ப்பாணம், ஜூலை 31

ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களில் தரை இறங்கிய உள்ள இந்தியத் துருப்புக்கள் எமது அனுமதி இன்றி முகாம்களை விட்டு வெளியேறமாட்டார்கள்.

விடுதலைப் புலிகளின் பேச்சாளர் திரு மூர்த்தி நேற்று (வியாழன்) காலை யாழ்-பழைய பூங்காவில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இப்பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திரு. மூர்த்தி தொடர்ந்து பேசுகையில், ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முகாமிட்டிருக்கும் வடமராட்சி, திருகோணமலை, பலாலி இராணுவ முகாம்களில் ஏராளமான இந்தியத் துருப்புகள் இந்திய விமானங்கள் மூலம் நேற்று இரவோடிரவாக இறக்கப்பட்டன.

தற்போது தங்கி உள்ள முகாம்களில் இருந்து இந்தியத் துருப்புகள் எமது அனுமதி இன்றி வெளியேற மாட்டா என்று இந்தியா எமக்கு உறுதி அளித்துள்ளது என்றார். (இ-10)

## ராஜீவுக்கு மரீனாவில் பாராட்டு விழா

சென்னை, ஜூலை 30

இலங்கை இனப்பிரச்சினைக்கு திரு. ராஜீவ் காந்தி சுமுகமான உடன்பாடு கண்டமையைப் பாராட்டி எதிர்வரும் [illegible] மரீனா கடற்கரையில் பாராட்டு விழா ஒன்று நடைபெறும்.

இந்தவிழாவை தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சியினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

இதேவேளை, பிரதமர் ராஜீவ் காந்தியையும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவையும் தமிழக தலைவர்கள் பலர் பாராட்டியுள்ளனர். (உ-ஒ)



ஒப்பந்தப் பத்திரங்களை ராஜீவும் ஜே. ஆரும் பரிமாறும் காட்சி

### இந்தியா துன்பம் இழைத்திருந்தால்
# மன்னிப்பேன் ஆனால் மறக்கவே மாட்டேன்!

## விஜயனின் காலத்தின் பின் முக்கிய விஜயம்
### ராஜீவை வரவேற்று ஜே. ஆர் உரை

இந்தியா துன்பம் இழைத்திருந்தால் மன்னிப்பேன். ஆனால் மறக்க மாட்டேன். விஜயன் இலங்கை வந்த பின்னர் இடம்பெற்ற மிகவும் பிரச்சினைக்குரிய விஜயமாக உங்கள் வருகை அமைந்துள்ளது.

ராஜீவ் காந்தியை வரவேற்று உரை நிகழ்த்துகையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

விஜயன் 2 ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்இங்கு வந்தான்.

சிங்கள இனத்தை உருவாக்கியவன் அவனே.

ஆகவே உங்கள் வருகை சிங்கள இனத்துக்கு புத்துயிர் கொடுக்கும் என்று நம்புகின்றேன்; புதுவாழ்வு அளிக்கும் என்று நம்புகின்றேன்.

**சிவில் யுத்தம்**

பல ஆண்டுகளாக நாடு சிவில் யுத்தத்தில் சிக்கி இருந்தது. அது இன்றுடன் முடிவடைகின்றது.

எனது அரசு, உங்கள் அரசு, தமிழ் நாடு அரசு ஆகியனவும், உபயோகமில்லாத யுத்தம் ஒன்றை நடத்தியவர்களும் இந்த உடன்படிக்கையைச் சரிவர அமுல் நடத்தினால் சமாதானம் இன்றே ஆரம்பமாகும்.

இலங்கையின் சுதந்திரம், ஒருமைப்பாடு, ஐக்கியம் ஆகியன இலங்கையினால் மட்டும் பாதுகாக்கப்படும், இந்தியாவின் வலிமையுடன்.

இது ஒரு பெரும் சாதனை.

நாம் எல்லோரும் தவறு செய்கின்றோம்.

நான் பல தவறுகளைச் செய்திருக்கின்றேன்; வருங்காலத்திலும் செய்யக்கூடும்.

நீங்களும் பிழை விட்டிருக்கிறீர்கள்; எதிர்காலத்திலும் பல பிழைகளை விடக்கூடும். ஆனால் நாம் புண்களைப் புதுப்பித்துக்கொண்டு கவலைப்பட்டுக் கொண்டு இருக்க முடியாது.

எனது அரசியல் வாழ்க்கை நியாயமான காலம் நீண்டது. எனக்கெதிராக நடந்து கொண்டவர்களை நான் எப்போதும் மன்னித்தே வந்துள்ளேன். ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை மட்டும் நான் மறப்பதில்லை.

ஆகவே இலங்கையும் இந்தியாவும் கடந்து பல நூற்றாண்டுகளாகசெயல்பட்டது போன்று இனிச் செயல் படலாம்.

**பிழையை மன்னிப்பது தெய்வீகம்**

ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், பிழை விடுவது மனித இயல்பு; மறப்பது தெய்வீகம்.

உங்கள் நாடும், மக்களும் எமக்கு துன்பம் விளைத்திருந்தால் நான் அதை மன்னிக்கின்றேன். ஆனால் அதை நான் மறக்கமாட்டேன்.

உலக முன்னேற்றத்துக்காகவும் பிராந்தியத்தின் முன்னேற்றத்துக்காகவும் இரண்டு நாடுகளும் கரம் கோர்த்துச் செயல்படுவோம்—

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா சொன்னார். (இ-எ)

**இந்தப் பக்கத்தில் வெளியாகும் செய்திகள் உதயன் நேற்றைய விசேஷ பதிப்பில் வெளியானவை.**

(ஆர்)

## தலங்கம பொலீஸ் தாக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை 31

தலங்கம பொலீஸ் நிலையம் புதன் பகல் தாக்கப்பட்டது.

இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு எதிராகக் கோஷமிட்ட கும்பல் ஒன்றே இத்தாக்குதலை நிகழ்த்தியதாகக் கூறப்படுகிறது.

கொழும்பிலிருந்து 24 மைல் தொலைவில் தலங்கம அமைந்திருக்கிறது. (உ)

## வெள்ளைகொடியுடன் வந்த சிப்பாய்கள் புலிகளுடன் உரையாடினர்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வயாவிளான் இராணுவ சென்றியில் இருந்த ஐம்பதுக்கும் அதிகமான இராணுவத்தினர் நேற்று விடுதலைப் புலிகளின் சென்றி நிலைக்கு வந்து உரையாடினர்.

இராணுவ சென்றியில் ஆயுதங்களை வைத்துவிட்டு வெள்ளைக் கொடியுடன் வந்த சிப்பாய்கள் புலிகளிடம் மிகவும் அன்னியோன்யமாகக் கலந்துரையாடினர்.

''நீங்கள் ஆயுதங்களை ஒப்படைக்கும் வரை நாம் முகாம்களில் இருப்போம்.

''நாம் போராட்டத்தில் இன்பம் காணவில்லை. இவ்வளவு காலமும் மனச்சாட்சிக்கு முரணாகவே தாக்குதல்களை நடத்தினோம்'' என்றும் அவர்கள் புலிகளிடம் கதைக்கும் போது கூறினர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தால் தமக்கு விடுமுறை கிடைத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

சுமார் ஒருமணி நேரம் இந்த உரையாடல் நடைபெற்றதாம்

புலிகளுக்கு இராணுவத்தினர் பிஸ்கெட் கொடுத்து மகிழ்ந்தனர். (உ-10-7-160)

## ஜெயவர்த்தன பார்த்து நின்றார்!

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைக் கடற்படைச் சிப்பாய் தாக்கியதை ஜனாதிபதி ஜெயவர்த்தனா பார்த்துக் கொண்டிருந்தார்.

பிரதமரைத் தாக்கிய சிப்பாயை, சக சிப்பாய்கள் பிடித்திழுத்தனர். பின்னர் அவரின் கைகள் இறுகக் கட்டப்பட்டன.

இச்சம்பவம் பற்றி ஜனாதிபதி ஜெயவர்த்தனா கருத்து வெளியிட்டார்.

'பிரதமரைத் தாக்கிய சிப்பாய் சூரியக்கதிர்த் தாக்கு (Sun Stroke) இலக்கானதால் இது நடந்தது'— என்று ஜனாதிபதி சொன்னார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

இன்று செய்யக் கூடிய நாளைக்கெனப் பின் போடாதே.

— ஜெபர்ஸன்


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073

31.07.1987 த.பெ.இல - 23


## பச்சைத் துரோகம்

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி ஸ்ரீலங்கா கடற்படைச் சிப்பாயால் தாக்கப்பட்டிருக்கிறார்! இந்தச் செய்தி உலகளாவிய ரீதியில் பெரும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தி உள்ளது. அது பெரும் பரபரப்பையும் உருவாக்கியது.

சரித்திரப் பிரசித்தி பெற்றது என வர்ணிக்கப்படும் இலங்கை-இந்திய (இனப் பிரச்சினைத் தீர்வு) ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக கொழும்பு வந்தவர் திரு. ராஜீவ். அமைதிப் பணிக்காக வந்தவர் அவர்.

புதன் கிழமை பிற்பகல் அவர் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். அதன் பின்னர் அவர் தாயகம் திரும்பு முன் ஜனாதிபதி மாளிகையில் வியாழன் காலை நடந்த அணிவகுப்பு மரியாதையின்போது தாக்கப்பட்டிருக்கிறார். அதுவும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கடற்படைச் சிப்பாய் ஒருவரினால் தாக்கப்பட்டிருக்கிறார்.

இது பெரும் பாரதூரமான குற்றமாகும் விருந்தாளி ஒருவரை வீட்டுக்கு அழைத்து அங்கு வைத்துத் தாக்குவது பெரும் வெட்கக்கேடானது; கேவலமானது, கோழைத்தனமானது.

ராஜீவ் தாக்கப்பட்டதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

ஜே. ஆர்.- ராஜீவ் ஒப்பந்தம் தென்னிலங்கை மக்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் உருவாக்கப்பட்டது. அதில் கைச்சாத்திடுவதற்காக இந்தியப் பிரதமரை இங்கு வரவழைத்தபோது, பாதுகாப்பு ஏற்பாடுகளை வெகு கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் செய்திருக்க வேண்டியது ஸ்ரீ லங்கா அரசினது முழுப் பொறுப்புமாகும். ஸ்ரீ லங்கா அரசு அந்தப் பொறுப்பிலிருந்து தவறிவிட்டது, அது மட்டுமல்ல. உலகத்தின் கண் முன்னே குற்றவாளியாக்கப்பட்டும் உள்ளது.

சம்பந்தப்பட்ட சிப்பாய்க்கு சூரிய வெளிச்சம் காரணமாய் ஏற்பட்ட கண் கூச்சத்தினால் தான் காந்தி தாக்கப்பட நேர்ந்தது என்று ஸ்ரீலங்கா ஜனாதிபதி கூறியிருக்கிறார்!

ஜனாதிபதியின் இந்த விளக்கம், காந்தி தாக்கப்பட்டதை விட மேலும் கேவலமானதாகும். அதிக வேதனை தருவதாகும்; சிரிப்புக்கிடமானதும் ஆகும்.

தாம் தாக்கப்பட்ட விவகாரத்தைத் திரு. காந்தி ''சிம்பிளாக'' எடுப்பது வேறு ஆனால் ஸ்ரீலங்கா ஜனாதிபதி மன்னிப்புக் கோருவதற்குப் பதிலாக, குழந்தைப் பிள்ளைத்தனமாகக் காரணம் கூறுவதை உலகம் மன்னிக்காது.

வான் முட்டும் சாட்டட் வங்கி முன்னே நிற்க, தோப்பாக இருக்கும் ஜனாதிபதி மாளிகையின் முன்னால் நடந்த அணிவகுப்பின் போது, சூரிய வெளிச்சம் தாக்குதலுக்குக் காரணமாயிருந்தது என்பதை கொழும்பு நகரைத் தெரிந்த ஒரு சிறு பிள்ளை தானும் ஒப்புக் கொள்ளாது.

ஒரு நாட்டின் தலைவருக்கு அணிவகுப்பு மரியாதை வழங்கும் நிகழ்ச்சிக்கு கண் கூசும் கடற்படைச் சிப்பாயையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமா?

1983ஆம் ஆண்டில் இந்தியர் ஒருவர் கதிர்காமத்தில் கொலை செய்யப்பட்ட போது, கொலைஞர் சித்தசுவாதீனம் இல்லாதவர் என்று தற்குறிக் காரணம் கூறப்பட்டதை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது.

இந்திய நாட்டின் பிரதமர் தாக்கப்பட்ட போதும், அதேபோன்ற ஒரு காரணம் கூறப்படுவதை உலகம் ஏற்கும் என்று ஜனாதிபதி எண்ணுவது பொருத்தமற்றது.

இதைப்போலவே இந்த நாட்டு அரசியலும், தமிழர் பிரச்சினையும் இருந்திருக்கும் என்பதை ராஜீவ் இனியாவது உணர்வார் என நம்புகிறோம்.

இளம் பிரதமராக இருந்தாலும் பல கோடி ரூபா செலவில் வெற்றி கொள்ள வேண்டிய இலங்கையை, சிறு அரசியல் சாணக்கியத்தால் வென்ற ராஜீவுக்கு இதுவும் புரியும், இன்னும் எத்தனையோ விஷயங்களும் புரியும் எனச் சொல்லத் தேவையில்லை அந்தப் பிரதேசத்தில் விளைந்திருக்கும் வெறித்தனத்தைப் பிரதிபலிப்பதும் அவருக்குப் புரிந்திருக்கும்.

குற்றத்தை மன்னிக்கும் அதே வேளை அதனை மறக்காத ஜே. ஆரின் போக்கை, ராஜீவும் இனிக் கடைப்பிடிக்கக் கூடும்! யார் அறிவார்!!

எது எப்படியோ விருந்துக்கு அழைத்த ஒருவரை அடி போட்டு அனுப்பிய ஸ்ரீ லங்காவின் பச்சைத் துரோகத்தை நாகரிகம் புரிந்த உலகம் மன்னிக்காது; கண்டிக்கவே செய்யும். அந்த வகையில் நாமும் கண்டிக்கிறோம்.

## கம்பராமாயண விரிவுரை

யாழ்ப்பாணம், ஜூலை 31

நல்லூர் உற்சவ காலத்தில் நல்லை ஆதீன முதலாவது குருமகா சன்னிதானத்தின் பிரதம சீடரான பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் கம்பராமாயண சங்கீத கதாப் பிரசங்கம் நல்லூர் மேற்கு வீதியிலுள்ள பிள்ளையார் கோவில் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 தொடக்கம் 7.30 வரை நிகழும்.

இதற்கான ஏற்பாட்டை நல்லூர் சைவ மகாசபை செய்துள்ளது.

# பிரேஸில் சிறையில் 28 கைதிகள் பலி!

ரியோடிஜெனரோ, ஜூலை 30

பிரேஸில் சிறை ஒன்றில் கைதிகளுக்கும் காவலர்களுக்கும் ஏற்பட்ட மோதலை அடக்க இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்போது 28 கைதிகளும் இரண்டு காவலர்களும் உயிரிழந்தனர்.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-எ)

பவித்திரா தலைமையிலான முன்னணி

## பிஜியின் அரசமைப்பு திட்டத்துக்கு எதிர்ப்பு

சுவா, ஜூலை 30

பிஜியின் புதிய அரசமைப்புத் திட்டத்தை டாக்டர் பவித்திரா தலைமையிலான தேசிய தொழிலாளர் முன்னணி எதிர்க்கின்றது.

இதை பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் டாக்டர் பவித்திரா அறிவித்திருக்கின்றார்.

பிஜியின் பழங்குடிகள் நிரந்தமாக ஆட்சி உரிமையை அனுபவிக்கக் கூடியதாக புதிய அரசமைப்புத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனையே வன்மையாக எதிர்ப்பதாக டாக்டர் பவித்திரா அறிவித்துள்ளார்.

இதனிடையில் பிஜியில் வன்செயல்களை அடக்குவதற்கு எதுவாக இராணுவ பலத்தை அதிகரிக்கப்போவதாக கேர்ணல் சித்திவெனி ரபுக்கா அறிவித்திருக்கின்றார்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் பவித்திரா அரசைக் கவிழ்க்க இராணுவப்புரட்சியை கேர்ணல் ரபுக்கா நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ எ)

## உலக உணவு தினம்

ஐ. நா. ஜூலை 30

உலக உணவு தினம் அக்டோபர் மாதம் 16 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

ஐ. நா. உலக உணவு ஸ்தாபனம் இதனை ஒழுங்கு செய்துள்ளது.

ஸ்தாபனத்தின் நூற்றுக்கு அதிகமான நாடுகளில் இத்தினம் கொண்டாடப்படும். (இ-எ)

## 8 பேர் பலி!

ஹெய்ட்டி, ஜூலை 30

அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்தியவர்கள் மீது பொலீஸார் சுட்டதில் எட்டுப் பேர் உயிரிழந்தனர்.

ஹெய்ட்டி அரசாங்கத்தை ராஜினாமாச் செய்யக் கோரி இந்த கிளர்ச்சி நடத்தப்பட்டது. (இ-எ)

சோவியத்

## அணு உலை விபத்து எதிரிகளுக்கு 10 வருடச் சிறை!

மாஸ்கோ, ஜூலை 30

சோவியத் யூனியனில் உள்ள செர்னோபில் அணு உலை விபத்து சம்பந்தமான வழக்கில் மூன்று உயர் அதிகாரிகளுக்கு தலா பத்து வருடக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சடந்த மூன்று வாரங்களாக நடந்த இவ் வழக்கின் தீர்ப்பு செவ்வாய்க்கிழமை அளிக்கப்பட்டது.

பதின்மூன்று மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்த அணு உலை விபத்தில் 30பேர் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

கடமைகளை நிறைவேற்றியதில் கவலையீனம் காட்டியதாக அணு உலை இயக்குநர், பொறியியலாளர், உதவிப் பொறியியலாளர் உட்பட ஆறுபேர் மீது சோவியத் நீதி மன்றம் ஒன்றில் விசாரணை நடத்தப்பட்டது.

விசாரணையின்பின்னரே இயக்குநர், பொறியியலாளர், உதவிப் பொறியியலாளர் ஆகியோருக்கு கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனை வழங்கப்பட்ட பின்னர் எதிரிகள் அழுதனர்.

விசாரணை ஆரம்பத்திலும் விசாரணை முடிவிலும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் அனுமதிக்கப்பட்டனர். (இ-எ)

## ஒத்திவைப்பு

புதுடில்லி, ஜூலை 30

எதிர்க்கட்சி எம்பிக்களின் குழப்பம் காரணமாக இந்திய ராஜ்ய சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது (உ-எ)

## பிரெஞ்சு யுத்தக் கப்பல்

பாரிஸ், ஜூலை 30

பிரான்ஸ் தனது யுத்தக் கப்பல்களை மத்திய தரைக் கடலுக்கும் இந்துமாகடலுக்கும் அவசரமாக அனுப்பி வைத்து உள்ளது.

தனது நாட்டு நலன்களைப் பாதுகாக்கவே இந்த நடவடிக்கையை எடுத்து இருப்பதாகப் பிரான்ஸ் அறிவித்திருக்கின்றது. (இ-எ)

**வெளி உலகில்**

## இளைஞர்களிடம் தலைமைப் பதவி

பீகிங், ஜூலை 30

இளைஞரிடம் தலைமைப் பதவியை ஒப்படைக்கப் போவதாக சீன ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார்.

ஜப்பானியத் தூதுக் குழுவைச் சந்தித்துப் பேசுகையில் 82வயதான ஜனாதிபதி ஷியா பெங் இப்படிச் சொன்னார். (இ-எ)

# உயிர்களுக்கு உய்தி நல்கும் கொடியேற்றத் திருவிழா

**க. சி. குலரத்தினம்**

திருக்கோயிலில் ஆண்டுக்கொருமுறை பெருந் திருவிழா என்னும் நைமித்திய உற்சவங்களுக்கு ஆரம்ப விழாவாகக் கொடியேற்ற விழா நடைபெறுகிறது. துவஜாரோகணம் என்றும், பிரம்மோற்சவம் என்றும் வழங்கும் இந்த விழா, பெரிய தத்துவங்களை உணர்த்துவதாகும்.

பிரம்மோற்சவம் படைப்புக்கிரமத்தைக் குறிப்பதோடு. சிவாத்துமா பரமாத்மாவுடன் ஒன்றுபடுந் தத்துவத்தைக் குறிப்பதாகும். கொடி மரம் சிவமயம். கொடிச் சீலை திரோதானம் என்னும் மறைப்புச் சக்தி, கொடிச் சீலையில் வரையப்பெற்ற இடபம் (எலி, சிங்கம், மயில்) உயிர். கொடிக்கயிறு திருவருள். தருப்பைக் கயிறு பாசம்.

எந்தக் கோயிலிற் கொடியேறினாலும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் விளக்கமுள்ள சித்தாந்தமே அங்கு சிறந்து நிலவுகிறது. சிவபிரான் உலகங்களுக்கு அப்பால் அண்டங்கள், அண்டங்களுக்கும் அப்பால் புவனங்கள் யாவற்றுக்கும் பேரரசன், பெருந் தலைவன். உயிர் வகைகள் அவரின் குடிகள். குடிகளை வருத்தும் வேடர்கள் போன்றவை பாசங்கள். பாசங்களை நீக்கி, உயிர்களைத் தம்பால் அணைக்கும் சிவனின் பரிபாலனச் சிறப்பைக் குறிப்பதே கொடியேற்றம்.

''திரிமலத்தே குளிக்கும் உயிர் அருள் கூடும்படி கொடி கட்டினனே'' என்று தில்லைவாழ் அந்தணருள் சிரேட்டரான உமாபதி சிவாசாரியார் தமது கொடிக்கவியிற் கூறி, அன்று சிதம்பரத்தில் கொடியேற்றினார்.

திருக்கோயிலில் நடைபெறுவன பிரதிஷ்டாதி உத்சவாந்தம் என்றும், உத்சவாதி பிராயச்சித்தம் என்றும் இருவித ஒழுங்கில் நடைபெறுகின்ற பூசைகளாகும். திருக்கோயிலில் திருவுருவத்தை எழுந்தருளச் செய்யும் முறைகள் யாவும் பிரதிஷ்டை. அதன் பின் நடைபெறும் விழாக்கள் உத்சவம். உத்சவத்தில் பிழைகள், தவறுகள், குற்றங்கள் காத்திரப் பிரகாரம் உண்டானால் அவற்றால் உலகத்துக்குக் கெடுதி வராமல் இருக்க இறைவனை இரந்து மன்னிப்புக் கோருதல் பிராயச்சித்தம்.

நாள் தோறும் செய்ய வேண்டிய நித்திய பூசைகளின் குறைகள் நீங்கச் செய்வனவே நைமித்திக பூசைகள் விழாக்கள். இந்த நைமித்திக விழா ஆண்டுக்கொருமுறை பத்து நாட்களுக்குக் குறையாமல் நடைபெறுகின்றன.

நைமித்திகம் என்பது சாகல்லியம், பாவநம், சாந்திகம், மாங்கல்லியம் என நால்வகையாக நிகழ்பவை. சாகல்லியம் என்பது கொடியேற்றம் முதலாகத் தீர்த்தம் ஈறுகச் செய்யும் விழாக்களாகும். இத்தகைய உத்சவம் யாவருக்கும் சுகத்தைக் கொடுப்பவாகும். எல்லோருக்கும் அவரவர் தகுதி, பரிபக்குவம் நோக்கி, வரிசை அறிந்து சுகஞ் செய்யும். இதனை சாம்பவி தீட்சை என்று சைவாகமங்கள் விளக்கிக் கூறுகின்றன.

**முதல்நாள் சடங்கு**

கொடியேற்றத்துக்கு முதல்நாள் விழாவுக்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்வர். மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம் என்பன முறையே புற்று மண் எடுத்து வருதல் தானியங்களை முளையிடச் செய்தல் எனப் பொருள் தரும். மண்ணைப் பதம் செய்து நவதானியங்களை முளையிடச் செய்தல் சிருஷ்டி என்னும் படைத்தல் தொழிலைக் குறிப்பதாகும். 'ஓம்' என்னும் பிரணவமே சிருஷ்டிக்கு மூலாதாரமானது எனவே விநாயகர் பூசை முதலில் நடைபெறுகிறது.

துவஜாரோகணம் என்பது துவஜம், ஆரோகணம் எனப் பிரித்தறியும் போது கொடி ஏறுதல் எனப்பொருள் தரும். கொடியேற்றும் போது குருக்கள்மார் கூறும் மந்திரங்கள் உலக நன்மையின் பொருட்டு அமையும். மக்கள் நன்கு வாழுதல் வேண்டும், அரசு தரும வழியில் நடைபெறுதல் வேண்டும் என்பனவே அங்கே விளக்கப்பெறுகின்றன.

தத்துவங்கள் தோன்றும் முறையினைக் குறிக்கும் கொடியேற்றம், தருமமும் உயிர்களும் தழைக்க வேண்டும், உய்யவேண்டும். உயர வேண்டும் என்று குறித்து, தரும தேவதையான இடபம் எழுதிய கொடியை மேலே ஏற்றுகின்றனர்,

**யாகபூசை**

உற்சவங்களின் போது இன்றியமையாது நடைபெறுகின்ற யாக பூசை விருத்திக் கிரமத்தைக் குறிப்பதோடு, இறைவன் பலவாகி எங்கும் வியாபித்து அருள்புரிவதைக் குறிக்கும். சிவனே உயிர்க்குயிராய் உள்ளவர். சிவத்தைப் பேசா எழுத்து என்றும் பரையாகிய சக்தியைப் பேசும் எழுத்து என்றும் கூறுவர். ஆன்மா பேசும் எழுத்தைச் சேர்ந்து பேசா எழுத்தைச் சார்தல் பேரானந்தப் பெருவாழ்வுக்கு வழி.

''பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும் கூசாமற் காட்டக்கொடி'' என்பது கொடிக்கவி.

உற்சவங்கள் பத்து நாட்கள் நடைபெறுதல் பெருவழக்கு. சில கோயில்களில் பதினைந்து இருபத்தைந்து நாட்கள் நடைபெறுதலும் உண்டு. தூல உடம்பை நீக்குதல் சூக்கும உடம்பை நீக்குதல், பற்றுக்களை நீக்குதல் கரணங்களை நீக்குதல் ஐந்தவத்தை நீக்குதல், பகைகள் கலைகளை நீக்குதல், தத்துவங்கள், நீக்குதல், குணங்கள் நீக்குதல், கிருத்தியங்கள் நீக்குதல், பரமானந்தம் பெறச் செய்தல் முதலியன உற்சவங்களின் உட்கருத்தாகும்.

★ **நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்** ★

## இலட்சியத்திலிருந்து மாறமாட்டோம்

### புலிகள் பிரமுகர் கூறுகிறார்

நாம் எமது தமிழ்ஈழத் தாயகத்தின் இலட்சியத்தில் இருந்து எள்ளளவும் மாறமாட்டோம்.

நேற்றுக் காலை யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் மக்களின் கேள்விக்குப் பதிலளித்த புலிகளின் புன்னாலைக் கட்டுவன் பொறுப்பாளர் ராஜன் மேற்கண்டவாறு கூறினார்.

எம்மக்கள் இருக்கும் வரை ஆயுதங்களை ஒப்படைக்க மாட்டோம்.

எமது போராட்டம் இந்தியாவுக்கு எதிரானதல்ல.

எமது உயிர் இருக்கும் வரை போராடிக் கொண்டே இருப்போம். இப்படி அவர் கூறினார்.

ஒப்பந்தத்தில் உள்ளபடி ஆயுதத்தை ஒப்படைக்கப் போகிறீர்களா? என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அவர் பதில் அளிக்கையில் மக்கள் எம்பக்கம் இருக்கும் வரை நாம் எமதுஆயுதங்களை ஒப்படைக்க மாட்டோம் என்று கூறினார்.

(இ 7-10-160)

## மயிலிட்டியில் இந்திய நிவாரண அனுமதிப் பத்திரம்

சாங்கேசன்துறை ஜூலை 31

மயிலிட்டிக்கரைகிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய நிவாரணத்துக்கான அனுமதிப் பத்திரங்கள் இன்று வெள்ளிக்கிழமை மயிலிட்டியில்வழங்கப்படும்.

மேற்படி பகுதியில் தமது வீடுகளில் தொடர்ந்து வசித்து வரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கே இந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட உள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை மயிலிட்டிக்கரை கிராம சேவையாளர் த. சண்முகநாதன் செய்துள்ளார்.

பளை, வீமன்காமம் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இந்திய நிவாரணஉதவிக்கான அனுமதிப்பத்திரங்கள் இன்று வெள்ளிக்கிழமை மல்லாகத்தில் வைத்து வழங்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை பளை வீமன்காமம் பிரசைகள் குழுத்தலைவர் திரு. மு. சின்னத்துரை கிராம சேவையாளர் க. இராசதுரை ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

(இ-68)

## தாக்குதலை நிறுத்த அரசு உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 31

இராணுவ முகாம்களில் இருந்தும் எதுவித தாக்குதல்களும் மேற்கொள்ளக் கூடாது என அரசு சகல இராணுவ முகாம்களுக்கும்உத்தரவு பிறப்பித்துள்ளது.

நேற்று மாலை 3 மணியில் இருந்து இந்த உத்தரவு அமுலுக்கு வந்துள்ளது.

போராளிகள் பகுதியில் இருந்து தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டாலும் படையினர் எதுவித பதில் தாக்குதல்களிலும் ஈடுபடக் கூடாது என்று உத்தரவிடப் பட்டுள்ளது (இ-10)

மல்லாகத்தில்

## உணவுப்பத்திரமும் உணவு முத்திரையும்

யாழ்ப்பாணம், ஜூலை 31

முன்பு மல்லாகத்தில் ஒருவார உணவுப் பத்திரம் பெற்றவர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சு வழங்கும் இரண்டாங் கட்ட இருவாரங்களுக்கான நிவாரண உணவுப் பத்திரமும் உணவு முத்திரைகளும் நாளை மல்லாகத்தில் வழங்கப்படும்.

முன்பு குட்டியப்புலம் பாடசாலையில் ஒருவார உணவுப்பத்திரம் பெற்றவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை மேற்கூறிய இருவார உணவுப் பத்திரமும் தெல்லிப்பளை ப. நோ. கூ. ச. கிளை இல: 18, 19, 20, 39 இல் உணவுப் பொருள் பெற்றவர்களுக்கு உணவு முத்திரைகளும் குட்டியப்புலம் பாடசாலையில் வழங்கப்படும்.

குடும்பத் தலைவர் அடையாளக் கார்ட் உணவு முத்திரை அடிக்கட்டைகளுடன் வர வேண்டும் என்று கோரப்பட்டுள்ளனர்.

இந்திய நிவாரண உணவுப் பொருள் பெறுதவர்களுக்கு 5ஆம் திகதி புதன், 6ஆம் திகதி வியாழன் ஆகிய தினங்களில் தெல்லிப்பளை துர்க்கைஅம்மன்கோவில்

(4 ஆம் பக்கம் பார்க்க)



**பொய்யாமொழி**

குறள்:

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்.

பொருள் :

இத்தொழிலை இக்கருவியால் இன்னவன் முடிப்பான் என்று ஆராய்ந்த பிறகு அதனை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD

# உதயன்

31-07-1987 வெள்ளிக்கிழமை

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

# இந்திய-இலங்கை பொருளாதார ஆணைக்குழு விரைவில் கூடும்

## ஜெனி டில்லி செல்வார்

கொழும்பு, ஜூலை 31

இந்திய — இலங்கை பொருளாதார ஆணைக் குழு விரைவில் கூடும்.

குழுவின் முதல் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நிதி அமைச்சர் ஜெனி டி மெல் விரைவில் புதுடில்லி வருவார்.

தாயகம் திரும்பும் முன்னர் கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி முன்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

திரு. காந்தி மேலும் சொன்னதாவது;

இலங்கை — இந்திய உடன்பாடு இரு நாடுகளின் உறவுகளைப் பலப்படுத்தும்.

இலங்கையின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க இந்தியா உத்தரவாதம் அளிக்கின்றது.

இலங்கைப் பிரசைகள் இந்தியாவுக்கு வந்து பௌத்த தலங்களைத் தரிசித்துச் செல்ல வசதி செய்து கொடுக்கப்படும்.

கபில ஸ்துவில் உள்ள புனித சின்னங்கள் இலங்கைக்குக் கொண்டு போக அனுமதிக்கப்படும். இலங்கை மக்கள் தரிசிப்பதற்காகவே இந்த ஏற்பாடு.

விஞ்ஞான, தொழில்நுட்பக் கல்வி சம்பந்தமான உயர்கல்விப் புலமைப் பரிசில்களை அதிகமாக இந்தியா இலங்கை மாணவர்க்கு வழங்கும்.

இப்படி பிரதமர் காந்தி தெரிவித்தார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் ''பாக்கு நீரிணையில் இந்திய-இலங்கைக் கடற்படைகள் கூட்டு ரோந்தை ஆரம்பித்துவிட்டன''— என்று பிரதமர் சொன்னார். (இ எ)

## எம். ஜி. ஆரும் வெற்றி விழாவில்!

சென்னை, ஜூலை 31

இலங்கை — இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைக் கொண்டாடும் வெற்றி விழாவில் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனும் கலந்துகொள்வார்.

இப்படி தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. எம். பழனியாண்டி தெரிவித்தார்.

இவ் வெற்றி விழா நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை சென்னை மரீனாக் கடற்கரையில் நடைபெறவுள்ளது.

பிரதமர் ராஜீவ் காந்தி விழாவுக்குத் தலைமை வகிப்பார். (இ-எ)

## எம். ஜி. ஆர். கண்டனம்

புதுடில்லி, ஜூலை 31

நாகரிக உலகுக்கே வெட்கக்கேடானது.

இப்படி தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன், பிரதமர் காந்தி மீது கொழும்பில் நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்தார்.

தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்தனர்.

முன்னாள் ஜனாதிபதி ஷெயில் சிங்கும் இச் சம்பவத்தைக் கண்டித்தார். (இ-எ)

## கண்காணிப்பு நடவடிக்கையில் இந்திய விமானங்கள்

பலாலி, ஜூலை 31

நேற்று முன்தினம் பிற்பகலும், நேற்று முழு நாளும் இந்திய போர் விமானங்கள் குடாநாட்டின் முழுப் பகுதிகளையும் சுற்றி கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டன.

இராணுவ முகாம்களைச் சுற்றியும் அவற்றை அண்மித்த பகுதிகளை அண்டியும் மிகத் தாழ்வாகப் பறந்த இந்திய போர் விமானங்களை மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று பார்த்தனர்.

அச்சுவேலி, வயாவிளான், பலாலி, தொண்டமானாறு, தெல்லிப்பளை புன்னாலைக்கட்டுவன், வடமராட்சிப் பகுதிகளில் மிகத் தாழ்வாக இந்த விமானங்கள் பறந்தன.

சில இடங்களில் பொது மக்கள் வெள்ளைச் சேலைகளை அசைத்துக் காட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

## உணவு...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

அருகில் உள்ள கிளைகளில் உணவுப் பொருள்கள் வழங்கப்படும்.

இதற்கான ஒழுங்குகளை வயாவிளான் கிராம சேவகர் திரு. செ. உலகநாதன் செய்துள்ளார். (இ)

## துருப்புக்களை அனுப்ப அமெரிக்காவும் இணங்கி இருந்ததாம்

கொழும்பு, ஜூலை 31

சமாதான உடன்படிக்கையை அமுல் நடத்துவதற்கு எதிராக நடைபெறும் கிளர்ச்சியை அடக்க இராணுவ உதவி தரும்படி விடுத்த வேண்டுகோளுக்கு அமெரிக்கா சாதகமாகப் பதிலளித்தது.

ஆனால் இந்தியா இராணுவ உதவியை ஏற்கனவே அளிக்கத் தொடங்கி விட்டது.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார் என்று நேற்று பி. பி. சி. அறிவித்தது.

இராணுவ உதவி கேட்டு பாகிஸ்தான், பிரிட்டன், சீனா ஆகிய நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தோம் என்று தெரிவித்த ஜனாதிபதி ஜெயவர்த்தன, அந்நாடுகள் அளித்த பதில் பற்றி ஒன்றும் கூறவில்லை —

இப்படி பி. பி. சி வானொலி அறிவித்தது. (இ-எ)

## பிரபா யாழ் வருவார்

யாழ்ப்பாணம், ஜூலை 31

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் வெகு விரைவில் யாழ்ப்பாணம் வந்து சேருவார் எனத் தெரியவருகிறது.

அவர் யாழ்ப்பாணம் வந்தபின்னரே சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்படும் என நம்பப்படுகிறது. (இ-10)

## ஜே. ஆர்.தான் துருப்புகளைக் கேட்டார்

கொழும்பு, ஜூலை 31

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் வேண்டுகோளின்பேரில்தான் இந்திய அரசு தனது துருப்புக்களை இலங்கைக்கு அனுப்பி வைத்திருக்கின்றது.

இப்படி ஆஸ்ரேலிய வானொலி அறிவித்தது. (இ-எ)

புதுடில்லி

## விமான நிலையத்தில் ராஜீவுக்கு வரவேற்பு

புதுடில்லி, ஜூலை 31

கொழும்பில் இருந்து திரும்பிய பிரதமர் ராஜீவ் காந்திக்கு புதுடில்லி விமான நிலையத்தில் வைத்து உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ராஜீவ் நீடூழி வாழ்க, ஜிந்தாபாத் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஜனாதிபதி வெங்கட்ராமன் மற்றும் அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் ராஜீவை வரவேற்க விமான நிலையம் வந்திருந்தனர்.

பிரதமர் கொழும்பில் தாக்கப்பட்ட சம்பவம் பற்றி ஜனாதிபதி வெங்கட்ராமன் கருத்துத் தெரிவிக்கையில் 'அமைதிப் போரில் ஈடுபடுபவருக்கு ஏற்படும் ஆபத்து இது'—என்று வர்ணித்தார்.

திரு. வெங்கட்ராமன் 'கடவுளுச்கு நன்றி' என்றும் சொன்னார்.

ஜனாதிபதி முதல் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் வரை கொழும்புத் தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்தனர்.

ஒரு நாட்டின் தலைவருக்கு கொழும்பில் சரியான பாதுகாப்பு வழங்கத் தவறிய செயலை எதிர்க்கட்சித் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்தனர். (இ-எ)

## இந்திய அமைதி-:.

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யிடுவர்.

அவர்கள் தமிழ் மக்களின் நலன் கருதியே வடக்கு கிழக்கு பகுதிகளில் விமானங்கள்மூலம் இறக்கப்பட்டதாக இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (அ-ஒ-10)

## ஆகஸ்ட் 3 இலிருந்து நேர அட்டவணைப்படி ஜீ. சி. ஈ. பரீட்சை நடைபெறும்

பலாலி, ஜூலை 31

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஜீ சி.ஈ. உயர்தரப் பரீட்சையின் ஜூலை 29 ஆம், 30 ஆம், 31 ஆம் திகதிகளிலும், ஆகஸ்ட் முதலாம் திகதியும் நடைபெற இருந்த பாடங்களின் தேர்வுகள் பிற்போடப்பட்டுள்ளன,

ஆகஸ்ட் மூன்றும் திகதியில் இருந்து நேர அட்டவணையின்படி பரீட்சையின் பாடத் தேர்வுகள் தொடர்ந்து நடைபெறுமெனப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்

விணுத்தாள்களைப் பரீட்சை மேற்பார்வையாளர்களிடம் குறிப்பிட்ட திகதிகளில் ஒப்படைக்க வேண்டாமெனப் பரீட்சையின் இணைப்பு உத்தியோகத்தர்களிடமும், பிரதேச ஒன்றிணைக்கும் அதிகாரிகளிடமும், கல்விப்பணிப்பாளரிடமும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ-119)

## ஒத்துழைப்பு வழங்க கோரிக்கை

சென்னை, ஜூலை 31

யுத்த நிறுத்தத்துக்கு ஒத்துழைக்கும்படி நான்கு தமிழ்ப்போராளி இயக்கங்கள் தங்கள் உறுப்பினர்களைக் கோரியுள்ளன.

இந்த இயக்கங்கள் சார்பில் திரு.எஸ். கேதீஸ்வரன் இத்தகவலை பி. ரி ஐ. செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்தார். (இ-எ)

## பரிமாறப்பட்ட தஸ்தாவேஜுக்கள்

கொழும்பு, ஜூலை 31

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் புதன் மூன்று தஸ்தாவேஜுகளைப் பரிமாறிக்கொண்டனர்.

1. இலங்கை-இந்திய உடன்பாடு.
2. அது சம்பந்தமான இணைப்பு.
3. இரண்டு தலைவர்களும் ஆளுக்கு ஆள் எழுதிக்கொண்ட கடிதங்கள்.

—இவைகளே அந்த மூன்று தஸ்தாவேஜுகள். (உ-எ)

## மக்களின் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தாலும் வன்செயல்கள் வேண்டாம் லலித் வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 31

மக்களின் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் வன்செயல்களில் ஈடுபடாது ஜனநாயகத்தைக் காப்பாற்ற முன்வர வேண்டும்.

நேற்று ரூபவாஹினிக்கு அளித்த விசேஷ பேட்டியின்போது தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனியார் மற்றும் பொதுச் சொத்துக்கு பெரும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. இது கவலையைத் தருவதாகும்.

இப்படியான வன்செயல்களை கைவிட்டு அஹிம்சை வழியைக் கடைப்பிடிக்குமாறு நான் மக்களை பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அனேக இடங்களில் போக்குவரத்துக்குத் தடைகள் போடப்பட்டுள்ளன. குறிப்பாக ரயில் பாதைகள் சேதமாக்கப்பட்டும், தடைகள் போடப்பட்டும் உள்ளன.

இதனால் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டாலும் மக்களுக்கு உணவு விநியோகம் செய்வதில் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

ஆகையால் தடைகளை நீக்கி, வன்செயல்களை நிறுத்தி மக்களுக்கு சீரான உணவு விநியோகம் செய்வதற்கு உதவுவீர்கள் என நம்புகிறேன்.

இதற்கு மக்கள் உதவாவிட்டால் பெரும் கஷ்டத்தை எதிர் நோக்க வேண்டி வரும்.

1983-ஆம் ஆண்டு கலவரத்தில் கூட நாட்டில் உணவுக்கு கஷ்டம் ஏற்படவில்லை அதை நாங்கள் எப்படியோ சமாளித்தோம்.

ஆனால் இன்று அந்த நிலை இல்லை. உணவு விநியோகத்திற்கு பெரும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது,

ஜனநாயக ரீதியில் தான் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் அதற்கு உதவி புரிவது உங்கள் கடமை.

இப்படி அவர் கூறினார். (இ-ஒ)

## தலைக்கு. . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தாவது;

அணிவகுப்பு மரியாதை முக்கால் வாசி முடிந்துவிட்ட நிலையில் சிப்பாய் ஒருவர் எனது தலையில் துப்பாக்கியால் ஓங்கி அடித்தார்.

அதை நான் இடது கண்ணால் அவதானித்தேன், உடனே நான் தலையைத் திருப்பிக் கொண்டேன். இதனால் தோளில் மட்டும் காயம் ஏற்பட்டது.

செய்தியாளர்: 'அதை ஒரு கொலை முயற்சி என்று கூறலாம் அல்லவா!

பிரதமர் காந்தி: 'அது பற்றி நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

கொழும்பில் என்னைத் தாக்க வந்தவரின் நோக்கம் என்ன என்று கூற முடியாது.

நாம் கடைப்பிடிக்கும் பாதையில் தொடர்ந்து செல்வது சில சக்திகளுக்கு பிடிக்கவில்லை என்பது தெளிவாகின்றது,

மண்டல சார்பற்ற இயக்கத்தை அழிக்க இச்சக்திகள் முயலுகின்றன.

இப்படி பிரதமர் காந்தி சொன்னார்.

## ராஜீவ் - - -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

முன் ஜெயவர்த்தன மற்றும் அமைச்சர்கள் நின்று கொண்டிருந்தனர்.

அப்போது திரு.காந்தி கடற்படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு வந்தார்.

அணிவகுத்து நின்ற கடற்படைச் சிப்பாய்கள் வரிசையில் கடைசியில் நின்ற சிப்பாய் ரைபிள் பின்புறத்தினால் திரு. காந்தியைத் தாக்கினார்.

உடனே திரு. காந்தி பின்னோக்கி வந்தார்.

ஏனைய பாதுகாப்பு அதிகாரிகள் அச்சிப்பாயை இழுத்துக்கொண்டு சென்றனர்.

இப்படி திரு. எலியட் தெரிவித்தார் என்று பி. பி. சி. தனது 24 மணி நேர நிகழ்ச்சியில் அறிவித்தது. (இ-எ)

## பத்திரிகை தணிக்கை

கொழும்பு, ஜூலை 31

பத்திரிகைத் தணிக்கை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக அரசு நேற்று இரவு அறிவித்தது. தகுதி வாய்ந்த அதிகாரிகளின் அனுமதி இன்றி செய்திகளை பத்திரிகைகள் பிரசுரிக்கக் கூடாது என்று அரசு அறிவித்துள்ளது.

தகுதிவாய்ந்த அதிகாரிகளாக திரு. சரத் சுமுனுகம, திரு. பி. ஐ. குமாரதுங்கா, திரு.கே. கந்தையா, திரு அனுரா குணசேகரா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தகுதி வாய்ந்த அதிகாரி எவரும் நியமிக்கப்பட்டதாக அறிவிக்கப்படவில்லை. (இ-எ)

## பிரபாவுடன்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

போன்ற தகவல்களைச் சுயாதீனமாக உடனுக்குடன் அறிய முடியாத சூழ்நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது.

எனினும் ஏனைய வழிகளில் கிடைக்கும் தகவல்களை எம்மக்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்துவதுடன் எம் இலட்சியத்திலிருந்து நாம் சிறிதும் பின்வாங்கி விடப்போவதில்லை என்பதையும் உறுதியுடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

இப்படி தமிழீழ விடுதலைப்புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தனர். (இ)

## ஒப்பந்த. . . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

படும்.

இதேவேளை இந்திய இராணுவத்தினர் தமது நிலைப்பாடுகள் பற்றிய துண்டுப்பிரசுரம் ஒன்றையும் இன்று மக்கள் மத்தியில் விநியோகிப்பர்.

ஒப்பந்தங்களின் முழு விவரங்களையும் மக்கள் அறிந்து கொள்ளும் வகையிலேயே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-10)

## இணைப்புக்கு எதிராக ஜே. ஆரே பிரசாரம் செய்வாராம்!

கொழும்பு, ஜூலை 31

கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடைபெறும்போது, வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்த்து பிரசாரம் செய்வேன்.

செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதி ஜெயவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் ராஜீவ் காந்தியும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் கூட்டாக புதன் மாலை செய்தியாளர் மாநாடு நடத்தினர்.

இது பாதுகாப்பு இராணுவ நடவடிக்கை உடன்படிக்கை போன்று உள்ளதே—இப்படி செய்தியாளர் உடன்படிக்கையின் சில பகுதிகளைச் சுட்டிக்காட்டி ஜனாதிபதியிடம் கேட்டார்.

''நீர் கூறுவது சரி'' இப்படி திரு. ஜெயவர்த்தன பதிலளித்தார். (இ-எ)

## ஆயுதபாணிகளாக- - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நட்பு நீடிக்கப்படுவது இந்திய அரசின் புரிந்துணர்விலேதான் தங்கியுள்ளது.

—இப்படி விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தயா(கோ.சிறி) நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

மேஜர் ஜெனரல் ஹர்கிர்சிங் ஊடாக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு இந்த அறிக்கை விடுக்கப் பட்டதாக புலிகள் தெரிவித்தனர்.

தமிழீழ மக்களின் இலட்சியத்துக்காக இறுதிமூச்சுவரை தம்மை அர்ப்பணித்துப்போராட விடுதலைப் புலிகள் சபதம் எடுத்துள்ளனர்.

தமிழ் மக்களின் சுதந்திரத்தையும், இறைமையையும் நிலை நாட்டி, தமிழ் மக்களின் இறுதி இலட்சியத்தை வென்றிட தம்மை முழுமையாக அர்ப்பணித்து இறுதி மூச்சுவரை போராட விடுதலைப் புலிகள் வீரசபதம் எடுத்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் உத்தியோக பூர்வமான அழைப்பை ஏற்று எமது கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசத்திலிருந்து, டெல்லி சென்ற தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் அவருடன் சென்ற எமது குழுவினரும் இன்று எம்முடன் தொடர்பு கொள்ளமுடியாத சூழ்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். இந்திய அரசின் இந்நடவடிக்கை எமக்கு இந்திய அரசின் மீதுள்ள நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது.

பிரதமரின் அழைப்பை ஏற்று அங்கு சென்ற எமது தலைவரையும், குழுவினரையும், ஏற்கனவே இந்திய அரசு எமக்கு உறுதி அளித்தது போல், எம்மிடம் ஒப்படைத்து, அவர்களுடன் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றி கலந்தாலோசனை செய்து, நாம் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரும் வரை எமது மக்களை காப்பாற்றுவதற்காக எம் கரங்களில் ஏந்திய ஆயுதங்களை எவரிடமும் ஒப்படைக்கவோ அல்லது நாம் சரணடைதல் என்ற பேச்சுக்கோ இடமில்லை என உறுதியாக கூறி வைக்க விரும்புகிறோம்.

தமிழ் மக்களின் சுபீட்சமான, சுதந்திரமான வாழ்வுக்கென முன்வைக்கப்பட்ட இத்திட்டங்களோ, பேச்சுக்களோ, ஒப்பந்தங்களோ தமிழ் மக்களின் சுபீட்சத்துக்காக களத்தில் நின்று போராடும் எம்முடனோ அல்லது அழிவுகளுக்கு, ஒடுக்குமுறைகட்கு உட்பட்டு வேதனைகளுடன் துன்பச்சுமைகளை தாங்கிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களுடனோ கலந்தாலோசிக்கப்படாது, அவர்களின் எந்த ஒரு அபிப்பிராயத்தையும் பெறாமல் இலங்கை-இந்திய அரசுகளால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டங்களுக்கோ, ஒப்பந்தங்களுக்கோ நாம் மதிப்பளிக்க மாட்டோம்.

இவ்வாறான இனப்படுகொலை முயற்சி ஒன்று எம்மக்கள் மீது திணிக்கப்படுவதை நாம் கைகட்டி நின்று ஏற்கமாட்டோம்.

-இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஓ)

## போராளிகள்- -

1-ம்பக்கத் தொடர்ச்சி)

கல்முனை.

திருகோணமலை மாவட்டம்:

திருமலை நகரம்.

குச்சவெளி.

மூதூர்.

மட்டக்களப்பு மாவட்டம்:

மட்டக்களப்பு நகரம்.

வாகரை.

சளுவாஞ்சிக்குடி.

துப்பாக்கிகள், கனன் லோஞ்சர்கள், விமான எதிர்ப்புக் கருவிகள், கிறனேட்டுக்கள், இயந்திரத் துப்பாக்கிகள் ஆகியன ஒப்படைக்கப்பட வேண்டிய ஆயுதங்கள் பட்டியலில் குறிப்பிடப் பட்டுள்ளன.

அரசாங்கம் நியமிக்கும் அதிகாரியிடம் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இரண்டு பேரின் முன்னிலையில் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்கலாம்.

இது சம்பந்தமான துண்டுப் பிரசுரங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விமானங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டன என்று இலங்கை வானொலி அறிவித்தது. (இ-எ)

## லோக சபை கண்டனம்

புதுடில்லி ஜூலை 31

கொழும்பில் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவரால் தாக்கப்பட்ட சம்பவத்தை இந்திய லோக சபை நேற்று வன்மையாகக் கண்டித்தது.

பிரதமர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து லோக சபை உறுப்பினர்கள் பலத்த கண்டனம் தெரிவித்தனர்.

அதன் பின்னர் லோக சபை நேற்று பிற்பகல் 4 மணிவரை ஒத்திவைக்கப் பட்டது. (இ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 31-07-1987
[illegible] Uthayan Publications (Pvt) Ltd. at 292/2 Navaly [illegible] Jaffna on Friday July 31, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org